# தூதன்

தூதன்-27 நவம்பர் 2018 தூது-10

உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும்
கர்த்தரைக் கனம்பண்ணு. நீதிமொழிகள் 3:9




Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை, தமிழ் சபை - துபாய்

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் – ஃபுஜைரா | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| உதவி போதகர் மடல் – இராஸ் அல் கைமா | 10 |
| உதவி ஆயரம்மா மடல் | 12 |
| செயலர் மடல் | 14 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 16 |
| மரியின் கிருபை இயேசு | 18 |
| நீங்கள் கிறிஸ்தவரா | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| வெள்ளைப்போளம், தூபவர்க்க மரம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children’s Corner | 29 |
| Birthday Celebrants | 32 |
| Wedding Anniversary | 35 |
| ஆராதனை பாடல்கள் | 36 |
| Jehoshaphat - King of Judah | 39 |



**P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645**
**Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae**

# சபை போதகர் மடல்

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின் இணையற்ற திருப்பெயரில் என் அன்பின் வாழ்த்துக்கள். ஆண்டின் நிறைவை நோக்கிப் பயணிக்கும் நாம் பதினோராவது மாதத்தில் நுழைந்திருக்கிறோம். நம் திருச்சபையின் இறையியல் பயணத்தில் இம்மாதம் நமக்கு முக்கியமான மாதம். ஆண்டவர் நம் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், திருச்சபை வாழ்விலும் நமக்கு அளித்த எண்ணற்ற நன்மைகளை, கிருபைகளை உணர்ந்து ஆண்டவருக்கு நன்றி பலிகளையும், துதி பலிகளையும் செலுத்துவதற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். மேலும் நமது பற்றுறுதிப் பயணத்தில் ஆண்டவரின் அருள் நிறைந்த, ஆற்றல் மிகுந்த இறை வார்த்தைகளினால் நம்மைப் புதுப்பித்து பெலன் கொள்ள சிறப்பு நற்செய்திக் கூட்டங்களில் பங்குபெறவும் நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். நன்றிப்பெருக்கின் உணர்வுடனும், உற்சாகமான மனநிலையுடனும் இதற்கு நம்மை தகுதிப்படுத்திக்கொள்வோம்.

இம்மாதத்தின் இறைவசனம் உபாகமம் 26:10.
இப்பொழுதும், இதோ, கர்த்தாவே, தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டு வந்தேன்.
"Now I bring the first fruits of the soil that you, O Lord have given me"
Deuteronomy 26:10

இஸ்ராயேல் மக்களுடைய வாழ்வும், இயக்கமும் அவர்தம் கடவுளாகிய "யாவே"-வை மையமாக வைத்தே சுழன்றுகொண்டிருக்கும். கடவுளையும், இஸ்ராயேல் மக்களையும் பிரித்துப் பார்க்கவே இயலாத அளவிற்கு அந்தப் பிணைப்பு அவர்களுக்குள் நிலைத்திருக்கும். இஸ்ராயேலரின் பண்டிகைகளும், விழாக்களும் கடவுள் அவர்களின் நடுவில் செயலாற்றின அற்புத செயல்பாடுகளின் நினைவுகூறுதலாகவே இருக்கும். அந்த நினைவுகூறுதலின் பண்டிகைகளே: பாஸ்கா, கூடாரப்பண்டிகை, வாரங்களின் பண்டிகை போன்றவைகள். இது தவிர இன்னும் பிற பண்டிகைகளும் உண்டு. அதில் ஒன்று முதற்கனிகள் செலுத்தும் பண்டிகை. உபாகமம் 26:1-15 திருமறைப்பகுதியில் இப்பண்டிகை கொண்டாட்டத்தின் முறைமைகளை நாம் காணலாம். இப்பண்டிகை வலியுறுத்தும் மூன்று முக்கிய குறிப்புகளைப் பார்ப்போம்.

1. Bringing the First Fruit
shows the invisible link between God-Land-People.
நிலத்தின் முதற்பலனைப் படைத்தல்
கடவுள் - நிலம் - இறைமக்களுக்கிடையே உள்ள புலப்படாத பிணைப்பை வெளிப்படுத்துகிறது.

பூமியும் அதின் நிறைவும் உலகமும் அதில் உள்ள குடிகளும் கர்த்தருடையது. திருமறையின் வழிகாட்டுதலின்படி நிலம், மக்கள் கடவுளின் உரிமைச்சொத்து. எனவே கடவுளின் வழியாய் பெற்றுக்கொண்ட நன்மையின் ஒருபகுதியை முதற்பலனை கடவுளுக்குப் படைப்பதென்பது இஸ்ராயேல் மக்களின் தனி உரிமை மற்றும் கடமை. எனவேதான் உபா.26:5-11 முதற்பலனைச் செலுத்தும் பொழுது நினைவுகூர்ந்து சொல்லவேண்டியவைகள் குறிப்பிடப்பட்டிருக்கும். நான், எனது, என்னுடைய என்ற தனிநபர் சார்ந்தோ, சுயநலம் சார்ந்தோ இதை வெளிப்படுத்தாமல் கடவுளுக்கும், நிலத்திற்கும், அதில் பயிரிடும் இறைமக்களுமான உறவின் பிணைப்பை வெளிப்படுத்துவது இந்த முதற்பலன் காணிக்கை.

## 2. Bringing the First Fruit

## shows the unforgettable gratitude of the Children of God

### நிலத்தின் முதற்பலனைப் படைத்தல்

### இறைமக்களின் நன்றி மறவா தன்மையை வெளிப்படுத்துகிறது.

இஸ்ராயேல் மக்களின் பயிரிடும் முறைமை இறைவனின் பேரருளைச் சார்ந்தே உள்ளது. மழையும், பனியும் அவர்களின் விவசாய முறைமைக்கு மிக மிக அவசியம். ஏற்றகாலத்தில் மழையையும், பனியையும் தந்து நிலத்தின் பலனை நூறத்தனையாய் ஆசீர்வதிப்பவர் கடவுள் ஒருவரே. இந்தப் புரிதலின் அடிப்படையில் முதற்பலனை படைக்கும் பொழுது நன்றியுணர்வுடன் ஆண்டவரை தொழுதுகொள்வார்கள்.

## 3. Bringing the First Fruit

## shows the immeasurable cheerfulness in the family and community

### நிலத்தின் முதற்பலனைப் படைத்தல்

### குடும்பத்திலும் சமூகத்திலும் காணப்படும் அளவிடமுடியாத மகிழ்வை வெளிப்படுத்துகிறது.

முதற்பலனைக் கடவுளுக்கு மட்டும் படைத்து மகிழுதல் போதாது. மாறாக நீயும் லேவியனும், உன்னிடத்தில் இருக்கிற பரதேசியும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்கும் உன் வீட்டாருக்கும் அனுக்கிரகம் பண்ணின சகல நன்மைகளினிமித்தமும் சந்தோஷப்படுவீர்களாக. முதற்பலனைப் படைத்தல் கூட்டு வாழ்வின் மகிழ்வையும், எளியோரும் மகிழ்ந்து களிகூறும் விழாவாகவும் இருத்தல் வேண்டும் என்ற செய்தியை வலியுறுத்துகிறது. இவ்வாண்டின் நன்றிப்படைப்பு விழா கொண்டாட்டத்தில் மேற்கண்ட சிந்தனைகளையும் மனதில் கொண்டு செயல்படுவோமாக.

ஆண்டவரின் அருளாசி உங்களுடன் எப்போதும் தங்கி இருப்பதாக.

ஆண்டவரின் அருட்பணியில்
உங்கள் ஆயர்
அருள்திரு.ஆ.விக்டர் பிரேம்குமார்.

# ஆயரம்மா மடல்

ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கடந்த 10 மாதமும் நம்மைக் கைவிடாது காத்து வந்த நம் தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரங்கள். அவர் இன்னமும் நம்மை நடத்த வல்லவராய் இருக்கிறபடியால் அவருடைய நாமத்தை உயர்த்துவோமாக.

நம்முடைய வாழ்வில் எப்போதும் ஆசீர்வாதங்கள்தான் என்றால், நமக்கு கஷ்டங்களைப் பற்றியோ, வறுமையைப் பற்றியோ தெரிய வாய்ப்பு இல்லை. இப்படி கஷ்டங்கள், துன்பங்கள், வறுமைகள் வந்தால்தான் இதில் இருந்து என்னை மீட்க யாரும் இல்லையா என்று சுற்றுமுற்றும் பார்த்து, பின்பு 'கடவுளே' என்று அவர் பாதத்தில் விழுவோம்.

இங்கு ஒரு விதவைத் தாயையும், அவர் மகனையும் வறுமை நிலையில் பார்க்கிறோம். ஆனால் இவர்கள் தேவனால் முன்குறிக்கப்பட்ட விதவைத் தாயாய் இருக்கிறாள். ஆம். 1 இராஜா. 17:8-15 வரை பார்க்கும்போது எலியாவிற்கு முன் அறிவிக்கப்பட்ட ஒரு விதவைத் தாய்.

1. கர்த்தரால் எலியாவிற்கு முன் அறிவிக்கப்பட்ட விதவை (1 இராஜா.17:9)
2. எலியாவிற்கு உணவு வழங்க ஆயத்தப்படுத்தப்பட்ட விதவை
3. கர்த்தரால் எலியாவின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்ட விதவை

இவை மூன்றும் அந்த விதவைத் தாயின் வாழ்வில் நடந்தது. பஞ்சகாலத்தில் இருக்கின்ற உணவை வைத்து தானும் தன் மகனும் சாப்பிட்டு, அடுத்த வேளை உணவில்லாமல் சாக எத்தனித்த வேளையில் அந்த விதவைத்தாயை எலியா கூப்பிட்டு, தண்ணீரும் அப்பமும் கேட்கிறார்.

1. முன் அறிவிக்கப்பட்ட விதவையை எலியா காண்கிறார்.
2. 17:9,11 வசனங்களில், தண்ணீர் கொண்டுவரும்போது கூட அப்பமும் கொண்டுவா என்கிறார். தேவன் கட்டளையிட்டதைக் கீழ்ப்படிதலுடன் நிறைவேற்றினாள்.
3. இவைகளை எல்லாம் கடவுள் அவளுக்கு ஒருவேளை வெளிப்படுத்தி இருக்கலாம்.

இப்படிப்பட்ட ஒரு ஆசீர்வாதத்தை அவள் பெற்றுக்கொள்ள தன்னை ஆயத்தப்படுத்தி இருந்தாள். எலியா தனக்குச் சொன்னபடியே அவள் கீழ்ப்படிந்து செய்ததால் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டாள்.

கடவுள் நம்மையும் முன்குறித்து வைத்து இருக்கிறாரா? என்று அறிந்து கொள்ளவேண்டும். கஷ்ட வேளையில், வறுமையில் நாம் ஆண்டவரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு இருக்கிறோமா என்று உணர்ந்து பார்க்கவேண்டும். வெறும் ஆசீர்வாதங்கள் மட்டும் இல்லாமல், கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று சொல்லாமல், கஷ்டவேளையில் இருக்கும் போது கடவுள் இந்தக்காரியத்தை எனக்குக் கற்றுக்கொடுத்தார் என்று சொல்வது நம்மை நாம் பக்குவப்படுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

கடவுளின் வார்த்தைகளைக் கேட்பது மட்டும் நம் பழக்கமாய் கொள்ளாமல், அதை நம்முடைய வாழ்வில் அப்பியாசப் படுத்திக்கொள்ள பழகவேண்டும்.

இப்படிப்பட்ட நன்மைகளை, ஆசீர்வாதங்களை தேவன் நமக்கு கட்டளையிடுவாராக. ஆமென்.

இப்படிக்கு
கிறிஸ்துவின் பணியில்
உங்கள் ஆயரம்மா
மேரி உமா விக்டர்.

**திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2018**

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 02-11-2018 | உலக ஞாயிறு பள்ளிநாள் திருச்சபையில் சிறார்கள் | உபா. 6:1-9 | 3யோவான் 1-15 | லூக்கா 18:15-17 | 47 |
| 09-11-2018 | நன்றி படைப்பு ஆயத்த வழிபாடு Harvest preparation worship | 2 நாளா. 31:3-10 | 2கொரி. 9:6-12 | மத்தேயு 5:21-26 | 126 |
| 16-11-2018 | நன்றி படைப்பு வழிபாடு | உபா. 26:1-11 | 2கொரி. 8:1-5 | லூக்கா 21:1-4 | 116:1-14 |
| 23-11-2018 | பெண் குழந்தைகளின் திருவழிபாடு | யோபு 42:10-17 | அப்போ. 16:16-18 | மத்தேயு 15:21-28 | 45:8-14 |
| 30-11-18 | நற்செய்தியைக் கொண்டாடுவோம் | யாத். 2:1-10 | அப்போ. 9:10-20 | லூக்கா 1:46-56 | 117 |

இரட்சிப்பை எழும்பச் செய்வார்.

கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு நம்மை இரட்சிக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். பத்து மாதம் முடிந்து பதினோராவது மாதத்தைத் தேவகிருபையினால் துவக்கின தமக்கு, தேவன் அருளும் வாக்குத்தத்தம்

இரட்சகராக இயேசுவை எழும்பப்பண்ணினார். அப்.13:23b

பிதாவாகிய தேவன், தாவீதின் சந்ததியில், இயேசுகிறிஸ்துவை இரட்சகராக எழும்பப் பண்ணினார். எந்தச் சூழ்நிலையில் எழும்பப் பண்ணினார்? தாவீது முதல் இயேசுகிறிஸ்து வெளிப்படும்வரை 28 தலைமுறையாக (மத்தேயு 1:17) படிப்படியாகத் தொடர்ந்து, தேவன் தங்களுக்கு அருளின மகிமையைத் தொலைத்துக் கொண்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில், சமுதாய ரீதியிலும், ஆவிக்குரிய ரீதியிலும், அதிகார ரீதியிலும் தொடர்ந்து தோற்றுப்போன இஸ்ரவேலருக்கு இரட்சகரை எழும்பச் செய்தார். இது அவர் ஊழியத்தில் விளங்கினது. எப்படியென்றால், 38 வருடமாக பெலவீனப்பட்டவனையும் (யோவான் 5:5), 18 வருடமாக (லூக்கா 13:16), மேலும் 12 வருடமாக (லூக்கா 8:43) தொடர் சுகவீனத்தால் பெலவீனப்பட்ட ஸ்திரீகளையும் இரட்சிக்க யாரும் இல்லாத வேளையில் இரட்சகராக எழும்பின இயேசுகிறிஸ்து, அவர்களை அவர்கள் கட்டுகளினின்று விடுவித்தார். நம் வாழ்விலும், தொடர்ச்சியாக நம்மை வருத்தப்படுத்திக் கொண்டிருக்கும் பிரச்சனைகள் எதுவாயிருந்தாலும், கர்த்தர் தீர்வு செய்யும்படி இம்மாதத்தில் இரட்சகராக எழும்புவார்.

### 1.தொடர் நெருக்கத்தில் நீரூற்றாக எழும்புவார் (ஆதி.26:6-22):

ஈசாக்குக்குத் தேவன் வாக்களித்த ஆசீர்வாதத்தின்மேல் பொறாமை கொண்ட விருத்தசேதனமில்லாத பெலிஸ்தர், அவனுக்குத் தொடர் நெருக்கடி கொடுத்தனர். எப்படியெனில்: ஆபிரகாமின் நாட்களில், வெட்டப்பட்ட துரவுகளை ஈசாக்கின் காலத்தில் தூர்த்துப்போட்டனர் (வச.15), பின்பு ஈசாக்கைக் கேராரை விட்டுப் புறப்படும்படி கட்டாயப்படுத்தினர் (வச.6,16). மேலும் ஈசாக்கைத் தொடர்ந்து, அவன் வேலைக்காரர் வெட்டின இரண்டு துரவுகளைக் குறித்தும் வாக்குவாதம் பண்ணினார்கள் (வச.20,21). அந்நாட்களில் ஒரு துரவை வெட்டவே இரண்டு வருடம் செல்லும். இப்படி ஈசாக்குக்கு ஏற்பட்ட தொடர்நெருக்கடியில் கர்த்தர் நீரூற்றைப்போல (ரெகொபோத்) எழும்பினார் (வச.22). அப்போது சமாதானம் எழும்பியது. பெலிஸ்தரின் நெருக்கடிகள் முடிந்தது.

நமக்குத் தேவன் வாக்களிக்கிற ஆவிக்குரிய வளர்ச்சியையும், இம்மைக்குரிய நன்மையினால் உண்டாகும் முன்னேற்றத்தையும் கண்டு, பொறுக்கமுடியாத சத்துருவான பிசாசும், பிசாசின் ஏவுதலுக்குச் செவிகொடுக்கிற மனிதர்களும், கர்த்தருடைய நன்மையைத் தங்கவிடாதபடிக்குத் தொடர் நெருக்கடி கொடுக்கும்படி செயல்படுவார்கள். அந்த தொடர் நெருக்கடியில் கர்த்தர் எழும்புவார். தொடர்ந்து நெருக்கடிகளால் வருத்தப்படுகிறீர்களா? தேவனை நம்புகிற உங்கள் வாழ்வில், இம்மாதத்தில் ஜீவ ஊற்றாக (யோவான். 7:37) இரட்சகர் எழும்பி நீதி செய்வார்.

### 2. தொடர் இழப்பில் விசுவாசமாக எழும்புவார் (யோபு 1:2-7):

யோபுவிடம், அவன் வேலைக்காரர், ஒருவன்பின் ஒருவனாக, தொடர் இழப்பைக் குறித்ததான துக்கச்செய்தியை அறிவித்தார்கள். யோபு தொடர்ந்து, தன் எருதுகளையும், கழுதைகளையும் (1:14,15), ஆடுகளையும் (1:16), ஒட்டகங்களையும் (1:17), வேலைக்காரரையும் (1:15,16,17), குமாரர் குமாரத்திகளையும் (வச.18) , வீட்டையும் (1:18,19), இறுதியாகத் தன் சுகத்தையும் (2:7) இழந்தான். பிள்ளைகளைக் குறித்தோ, சுகத்தைக் குறித்தோ, வேலையைக் குறித்தோ, தொழிலைக் குறித்தோ துக்கச் செய்திகளையே தொடர்ந்து கேள்விப் பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

இப்படித் தொடர் இழப்பினால் வாதிக்கப்பட்ட யோபுவின் வாழ்வில், தேவன் எழும்பினார். எப்படியென்றால்: விசுவாசத்தைத் துவக்குகிறவராக எழும்பினார் (1:21b). அந்த விசுவாசத்தின் விளைவு: இழந்தவைகள் இரட்டத்தனையாக வந்தது. யோபுவின் வாழ்வில் எழும்பின தேவன், இம்மாதத்தில், தொடர் இழப்பினால் உண்டான துக்கத்தை மாற்றும்படி, விசுவாசத்தைத் துவக்குகிறவராக, நம் வாழ்விலும் எழும்பி, மகிழ்ச்சியின் செய்தியைக் கேட்கும்படி செய்து, இரட்டத்தனையான நன்மையால் நிரப்புவார்.

### 3. தொடர்விழுதலில் கிருபையாக எழும்புவார் (யோ.10:1-11):

இஸ்ரவேலர்கள், எகிப்திலிருந்து புறப்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து பாவத்தில் விழுந்து, தேவனுடைய உடன்படிக்கையின் பிரமாணத்தை மீறினர். எத்தனையோ நியாயாதிபதிகள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் எழும்பினாலும் இஸ்ரவேலரை விடுதலை வாழ்வில் நிலைநிறுத்த முடியவில்லை. பாபிலோனின் சிறையிருப்புக்குப்பின் எழும்பின பரிசேயர், சதுசேயர், வேதபாரகராலும் தொலைந்துபோன இஸ்ரவேலரை தேவனிடம் திருப்பமுடியவில்லை. இப்படித் தொடர்ந்து தொலைந்துபோன இஸ்ரவேலரைத் தேடி இரட்சிக்கும்படிக்கு, இயேசுகிறிஸ்து நல்ல மேய்ப்பனாக எழும்பினார் (வச.11).

எழும்பி எப்படி இரட்சித்தார்? பாவம் பெருகும்போது விழுதல் தொடரும் (ரோ.5:20). அங்கு கிருபையை அருளும்படி நல்லமேய்ப்பன் எழும்புகிறார். அந்த கிருபை, பாவத்திலிருந்து விடுதலை தந்து, பரிசுத்தமாகுதலையும், நித்திய ஜீவனையும் அளிக்கிறது (ரோ.6:22). தொடர்ந்து: ஜெபிக்க முடியாதபடிக்கோ, விசுவாசத்தில் நிலைநிற்க முடியாதபடிக்கோ, தேவனுக்குப் பிரியமாக வாழமுடியாதபடிக்கோ விழுந்து கொண்டே இருக்கிறோமா? இம்மாதத்தில் மீட்பர் எழும்புவார். விழாதபடிக்குக் கிருபையைத் தருவார்.

இம்மாதத்தில் தேவன் இரட்சகராக எழும்பி நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்,
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

### சிந்திக்க ஒரு சிறுகதை

முத்து வியாபாரி ஒருவர் உலகமெல்லாம் சுற்றி விலையேறப்பெற்ற முத்துக்களைச் சேகரித்து வந்தார். தூத்துக்குடியில் முத்துக் குளிப்பவர் ஒருவர் மிகப்பெரிய முத்து ஒன்று வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டார். அதை எப்படியாவது தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ள விரும்பினார்.

அவர் தூத்துக்குடி சென்று அந்த மனிதனைச் சந்தித்து, தான் என்ன விலை வேண்டுமானாலும் கொடுப்பதாகவும், அந்த முத்தைத் தனக்குக் கொடுத்துவிடும்படியாகவும் கெஞ்சினார். அந்த முத்துக்குளிப்பவர் துக்கத்தோடு புன்முறுவல் பூத்தார்.

“உங்களால் அதற்குக் கிரயம் செலுத்த முடியாது” என்றார் அந்த முத்துக்குளிப்பவர். “உங்களுக்குக் கட்டாயம் வேண்டுமா?” என வினவினார். மிகச் சந்தோஷத்துடன் முத்து வியாபாரி, “அந்த மிகப்பெரிய முத்து கட்டாயமாக வேண்டும்” என்றார்.

“உங்களுக்குக் கட்டாயம் வேண்டுமானால், அதை இலவசமாக வேண்டுமானால் கொடுக்கலாம்” என்றார். “அப்படி எப்படி முடியும், விலையைச் செலுத்தாமல் அதை உங்களிடமிருந்து பெற்றுக்கொள்வது நியாயமல்ல. நான் அதின் விலையைக் கொடுப்பேன் என்றார்” முத்து வியாபாரி.

அப்போது அந்த முத்துக்குளிப்பவர், ஏன் அந்த முத்திற்கு விலை செலுத்த முடியாது என்று விளக்கலானார். என் மகனும் என்னைப்போலவே முத்துக் குளிப்பவன். இந்த பெரிய விலையேறப்பெற்ற முத்தை அவன் எடுத்த நாளில், அவன் கடலின் மிக ஆழத்திற்குச் சென்று, அவன் நீர்மட்டத்திற்கு வந்தபோது, திடீரென்று தண்ணீர் அழுத்தம் நீங்கியதால், காற்று அவன் இரத்தத்திற்குள் கொப்பளித்து வந்து உடனே மரித்துப்போனான். என் ஒரே மகனின் உயிர்க்கிரயத்தினால் எடுக்கப்பட்டது இந்த முத்து. இதற்கு நீங்கள் என்ன விலை கொடுப்பீர்கள்? என்றார் முத்துக்குளிப்பவர்.

முத்து வியாபாரி, இலவச ஈவாக அவர் கையிலிருந்து அந்த முத்தைப் பெற்றுக்கொண்டு கண்ணீரோடு நன்றி செலுத்தினார்.

இரட்சிப்பாகிய விலையேறப்பெற்ற முத்து தேவனுடைய இலவச ஈவு. தேவனது ஒரே பேறான மகனாகிய இயேசுகிறிஸ்துவின் உயிரைக் கொடுத்து அது சம்பாதிக்கப்பட்டது. நாம் இரட்சிப்பைப் பெறும்படி எதையும் செய்யமுடியாது. தேவனுடைய இந்த இலவச ஈவை, நாம் நன்றியோடு பெற்றுக்கொள்ள அவர் கேட்கிறார்.

வேதவாசிப்புப் பகுதி : எபேசியர் 2:1-10
மனப்பாட வசனம் : எபேசியர் 2:8

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனி.்.பர் ஆல்வின்,
உதவி ஆயரம்மா.

## Childrens Corner - October 2018

Grade 3 - Grade 5
Sanjay Sumesh
Grade 6 - Grade 8
Hanna Liprens Livingston
Dany Solomon
Joel Sumesh
Grade 8 and above
Alston Samuel



# உதவி போதகர் மடல்

கர்த்தரைப் புகழ்ந்து, துதித்து, நன்றி கூறி, நவம்பர் மாதத்தின் வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கிறேன். புதிய மாதத்தில், நம்மை மறவாத, மாறாத இயேசுகிறிஸ்து நம் வாழ்வுக்குத் தேவையானவைகளை அருளுவாராக.

கர்த்தரின் வசனத்தின் வாயிலாக, புதிய மாதத்தில் ஆண்டவர் நம்மீது வைத்திருக்கும் அன்பைப் புரிந்து கொள்வோம்.

## நிதமும் தொடரும் நிழல்

திருமறைப்பாடம் : சங்கீதம் 121 - தியான வசனம் : சங்கீதம் 121:5

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்,
கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்."
"The Lord watches over you, the Lord is your shade at your right hand."

பக்தியுள்ள ஒவ்வொரு யூதனும் தன் வாழ்நாளில் ஒருமுறையாவது எருசலேமுக்குப் புனிதயாத்திரை செல்வார்கள். இந்தப் புனித யாத்திரிகர்கள், கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். செல்லும் பாதையில் கடுமையான வெப்பம், தாகம், பசி, சுகவீனம், விபத்து, திருடரின் தாக்குதல் போன்ற பல அபாயங்களைச் சந்திக்க நேரிடும். இரவு நேரங்களில் தங்குமிடங்களில், கொள்ளையரிடமிருந்து தங்களைப் பாதுகாக்க சுற்றியுள்ள மலைகளில் காவலுக்கு ஆட்களை நிறுத்தி வைப்பார்கள். இந்த அனுபவத்தைப் பின்னணியாகக் கொண்டுதான் சங்கீதம் 121 எழுதப்பட்டுள்ளது. இது புனிதயாத்திரை சங்கீதங்களில் ஒன்று.

இந்த சங்கீதத்தின் மையக்கருத்து, கர்த்தர் நிதமும் தொடரும் நிழலாக பாதுகாக்கிறார் என்பதாகும். எருசலேமுக்குச் செல்லும் வழியில் புனித யாத்திரிகர்களைப் பாதுகாத்த கர்த்தர், தம் பிள்ளைகளை வாழ்க்கை என்னும் பயணத்தில் நிழலாகப் பாதுகாக்கிறார்.

### 1. கர்த்தர் காக்கும் நிழலாகச் செயல்படுதல் (சங். 121:5):

"கர்த்தர் உன்னைக் காக்கிறவர்" "The Lord watches over you"

இவ்வுலகில் மனிதன் பாதுகாப்பு தேடி, ஓடி வாழும் சூழலை நாம் காணமுடிகிறது. வியாதிக்கும், விபத்துக்கும், இயற்கையின் அழிவிற்கும், பாதுகாப்பிற்காக அனேக முன்னேற்பாடு முயற்சிகள் செய்கிறார்கள்.

ஆனாலும் அந்த பாதுகாப்பையும் தாண்டி ஆபத்துக்கள் வருகின்றன. பகலில் வெயிலும், இரவில் நிலவும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. ஏனெனில் கடவுள் உன்னைக் காக்கிறார் என்றச் செய்தியைத் திருப்பாடகர் இந்தப் பாடல் வழியாகக் குறிப்பிடுகிறார். ஏசாயா இறைவாக்கினர் ஏசாயா 25-4ல் "கடவுள் நமக்கு வெயிலுக்கு ஒதுங்கும் நிழலாக இருக்கிறார்" எனக் கூறுகிறார்.

யோசுவாவும், காலேபும் சபையாரைப் பார்த்து எதிரிகளைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப்போயிற்று. கர்த்தர் நம்மோடே இருக்கிறார், நாம் பயப்படத் தேவையில்லை என்றனர் (எண்.14:9). நமக்குப் பாதுகாப்பு நம்மைக் காக்கும் நிழல் கிறிஸ்துவே. இதோ உலகத்தின் கடைசிவரை நான் உங்களோடு இருக்கிறேன் என்றவர் நிழலாய் நம்மோடு இருக்கிறார்.

### 2.கர்த்தர் நம்முடன் பயணிக்கும் நிழலாக செயல்படுதல் (சங்.121:8):

"கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இதுமுதற்கொண்டு என்றைக்கும் காப்பார்"

"The Lord will watch over your coming and going both now and forevermore"

நிழல் நாம் செல்லும் இடமெங்கும் நம்முடன் வரும். அதுபோலவே கர்த்தர் நம் வாழ்வில் நம்மோடு பயணிக்கிறார். நெடுந்தொலைவுப் பயணம் செய்கிறவர்களுக்கு அதிக சிரமங்கள் உண்டு. வெயிலின் தாக்கம் ஏற்படும்போது பயணம் பாதிக்கப்படும். நெடுஞ்சாலை ஓரங்களில் மரங்கள் வளர்ப்பது, பயணம் செய்வோர் வெயிலில் சிரமம் இன்றி பயணம் செய்யவே. அதுபோலவே கடவுள் நம்மோடு பயணப்பட்டு, பயணச் சிரமங்கள் ஏற்படாமல் சுகமாய்ப் பயணம் செய்ய உதவுகிறார். அவர் நம் காலைத் தள்ளாடவொட்டார். பெலனோடு வெற்றியாய் வாழ்வின் பயணத்தை மேற்கொள்ள நிழலாய் உடன் பயணிக்கிறார்.

நாம் திருமறை காட்டும் ஒளியில் நடக்கும்போது நிழலாய் கடவுள் நம்முடன் இருந்து நம்மைப் பாதுகாத்து ஆசீர்வதிப்பார். கர்த்தர் உங்கள் வாழ்வுக்கு வேண்டிய நன்மைகளை அருளுவாராக. ஆமென்.

கிறிஸ்துவின் திருப்பணியில்
Rev.M.Rajesh Kumar.
உதவி போதகர்.

கர்த்தருடைய கிருபைக்காக, அன்புக்காக, ஆதரவிற்காக அவரை ஸ்தோத்தரிக்கிறேன். உங்கள் அனைவருக்கும் புதிய மாதத்தின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். புதிய மாதத்தில் கர்த்தர் நம் வாழ்வில் கரிசனையுடன் இரங்கி உதவுவாராக.

## தன்னலமற்ற சிறுமி

திருமறைப்பாடம் : 2 இராஜா.5:1-6 - தியான வசனம் : 2 இராஜா.5:3

“அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.”

சீரியா தேசத்து படைத்தலைவன் நாகமான். இவன் மிகுந்த செல்வாக்குடையவன். மகா பராக்கிரமசாலி. அவன் குஷ்ட ரோகியாயிருந்தான்.

சீரியர்கள் இஸ்ரவேல் தேசத்து சிறுபெண்ணை சிறைபிடித்துக் கொண்டு வந்தனர். தனக்கும், தன் ஜனத்திற்கும் தீங்கு செய்தவர்கள் சுகமுடனும், நலமுடனும் நன்றாக இருக்க வேண்டும் என நினைப்பது ஆச்சரியமானது. இப்படி நல் உள்ளம் கொண்ட சிறைப்பிடிக்கப்பட்ட சிறுமி தன் எஜமான் குணமடைய எப்படி செயல்பட்டாள் என்பதை 2 இராஜாக்கள் 5:1-6 வரையுள்ள பகுதியிலிருந்து அறிந்து கொள்வோம்.

### 1. கரிசனையுடன் உதவிய சிறுமி (2 இராஜா. 5:3a)

சீரியாவிலிருந்து சிறைபிடித்துக்கொண்டு வரப்பட்ட சிறுமி நாகமானின் மனைவிக்கு பணிவிடையாற்றிக் கொண்டிருந்தாள். விளையாடும் பருவத்தில் அடிமை வேலை. தன் பெற்றோருடன் சந்தோஷமாய் இருப்பதிற்குப் பதில் சோகமான மனநிலை. இப்படிப்பட்ட சூழலில் சிறுமி எரிச்சலுடனும் மனக்கசப்புடனும் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் சிறுமி அப்படியிருக்கவில்லை. சிறுமியை சிறைப்பிடித்துக் கொண்டுவந்தது நாகமான். ஆனால் தன் எஜமானின் நோய் குணமாக வேண்டும் என விரும்பினாள்.

தான் துன்பப்பட்டபோதும் தன் எஜமான் துன்பப்படுவதை அவளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. தன் எஜமான் கஷ்டப்படுவதைப் பார்த்து மகிழ்ச்சி அடையவில்லை. மாறாக தன் எஜமான்மீது கரிசனைப்பட்டு உதவும் எண்ணம் கொண்டாள். தன்னலம் கருதாமல் பிறர்நலம் கருதினாள். பிறர்மீது கரிசனை கொண்டு தன்னலம் கருதாமல் பிறர்நலம் கருதினாள். பிறர்மீது கரிசனை கொண்டு உதவும் எண்ணம் ஏற்படும் போது நம் வாழ்வு ஆசீர்வதிக்கப்படுகிறது. யோசேப்பு, வாழ்வில் ஆசீர்வதிக்கப்பட காரணம், இந்த கரிசனையும் உதவி செய்யும் எண்ணமும்தான். பஞ்சம் வரப்போகிறதை அறிவித்தான். பரிகாரத்தை பரிந்துரை செய்தான். அவன் வாழ்வு உயர்த்தப்பட்டது (ஆதி.41:31-36). நாமும் மற்றவர் மீது கரிசனையுடன் உதவும் சிந்தையை வளர்த்துக்கொள்வோம்.

## 2. கர்த்தரிடம் விசுவாசமுள்ள சிறுமி (2 இராஜா.5:3b)

சிறைப்பிடிக்கப்பட்ட சிறுமி கர்த்தர் தீர்க்கர் வழியாக செய்த அற்புதங்களை கேள்விப்பட்டிருந்தாள். ஒருவேளை தன் கண்களால் பார்த்திருக்கவும் கூடும். ஆகவேதான் தன் எஜமானியிடம், என் ஆண்டவர் எலிசா தீர்க்கதரிசியிடம் போனால் இவருடைய குஷ்டத்தை மாற்றுவார் எனக் கூறினாள். நாகமானும் எலிசாவிடம் சென்று சுகத்தையும் பெற்றுக்கொண்டான். இயேசு நாசரேத்து ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தபோது எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில், இஸ்ரவேலில் அனேக குஷ்டரோகிகள் இருந்தார்கள். நாகமானைத் தவிர வேறொருவரையும் சொஸ்தமாக்கவில்லை (லூக்கா 4:27). சிறுமி கர்த்தரிடம் வைத்த விசுவாசம் எத்தனை ஆச்சரியமானது. தன்னைச் சிறைப்பிடித்தவர்களோடு தன் விசுவாசத்தைப் பகிர்ந்துகொண்டாள். நாமும் நம் வாழ்வில் எத்தனை துன்பங்கள் வந்தாலும் கர்த்தரிடம் உள்ள விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம்.

அன்பானவர்களே, நாம் இயேசுகிறிஸ்துவின் தன்னலமற்ற வாழ்வை நமது வாழ்வாக்குவோம். தன்னலமற்ற பணிவிடைகளை நமது வாழ்வில் நிறைவேற்றி இயேசுவுக்கு சான்று பகர்வோம்.

புதிய மாதத்தில் நலமான வாழ்வைக் கர்த்தர் உங்களுக்கு அருள்வாராக.

கிறிஸ்துவின் பணியில்
திருமதி J.விஜிலா ராணி
உதவி போதகரம்மா.

குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம் ஜீவனை நமக்கு ஈவாகத் தந்து நன்மையும் கிருபையும் நம்மைச் சூழ்ந்து, நம்மை அனுதினமும் வழிநடத்தும் பரிசுத்த ஆவியையும் தந்து ஈகையின் முக்கியத்துவத்தையும் கற்றுத்தந்த நம்முடைய தேவாதி தேவனின் நிகரற்ற நாமத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

கடந்த அக்டோபர் மாதம் 5ஆம் தேதி, நம் திருச்சபையின் மூத்த உறுப்பினர்களைக் கௌரவிக்கும் வண்ணமாக அவர்களுக்கு பொன்னாடை போர்த்து மரியாதை செலுத்தினோம். அதைத் தொடர்ந்து நடைபெற்ற சிறப்புக் கூடுகையில் வாலிபர்கள் அவர்களை கௌரவித்து சிற்றுண்டி வழங்கினார்கள். அதில் Dr.Benjamin, Mrs.Jerifa Vivek, Mrs.Priya Singh, Mr.William Jeyasingh மற்றும் நமது ஆயர் அவர்களும் நல்லாலோசனைகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். 12ஆம் தேதி நடைபெற்ற ஆராதனையை நமது திருச்சபையின் வாலிபர்கள் சாட்சி கலந்த பாடலோடு மிகச் சிறப்பாக நடத்தித் தந்தார்கள். அதைத்தொடர்ந்து அவர்களுக்கான சிறப்புக்கூடுகை நமது ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அதில் சகோ.இதயசந்திரன் சிறப்புச் செய்தி தந்து வாலிபர்களை உற்சாகப்படுத்தினார்கள். அதே நாளில் நம் சிறுவர் பாடசாலையின் ஆசிரியர்களுக்கான சிறப்புக்கூடுகையில் நமது ஆயர் Rev. Victor Premkumar அவர்கள் சிறப்புச்செய்தி கொடுத்து சிறுவர் பாடசாலையின் ஆசிரியர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

துபாய் Chaplaincy மூலமாக இராஸ் அல் கைமாவில் நடைபெற்ற சிறப்பு வாலிபர் முகாமில் கலந்துகொள்ள பொறுப்பேற்றுச் சென்ற திரு. ஜூலியன் அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து சென்ற நம் திருச்சபையின் அனைத்து வாலிபப் பிள்ளைகளுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்டோபர் 19ஆம் தேதி நடைபெற்ற ஆராதனையில் அலைன் திருச்சபைப் போதகர் Rev. Christopher Rajendran அவர்கள் தேவ செய்தி கொடுத்தார்கள். அவ்வாராதனையில் சகோ. Sam Rajkumar அவர்கள் சிறப்புப் பாடல் பாடி நம்மை மகிழ்வித்தார்கள். 26-ம்தேதி ஆராதனையில் Rev.சாது சத்தியராஜ் அவர்கள் செய்தி கொடுத்தார்கள்.

நமது இராஸ் அல் கைமா கிளைச்சபையின் அறுப்பின் பண்டிகை அக்டோபர் மாதம் 26ஆம் தேதியன்று மாலை மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதற்காக உழைத்த கிளைச்சபையின் உறுப்பினர் Mr. Y. Edwin Nayagam

அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து பலவிதங்களில் உதவி செய்த யாவருக்கும், கொடுத்த, ஜெபித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இவ்வருடம் நம் திருச்சபையின் குடும்பப் பண்டிகையான அறுப்பின் பண்டிகையை "முதல் அறுவடை" (The First Harvest) என்ற தலைப்பில் கொண்டாட ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறோம். இதற்காக திருச்சபையார் ஊக்கமாக ஜெபித்து ஆயத்தப்படுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். திருச்சபையார் வழக்கம்போல நமது பாரம்பரிய உணவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களைப் படைத்து இவ்விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த வருடம் நம் அறுப்பின் பண்டிகை Dubai Silicon Oasisஇல் உள்ள இந்தியன் உயர்நிலைப் பள்ளியில் வைத்து நடைபெறும். இவ்விழாவை நடத்த இடம் தந்து உதவிய இந்தியன் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்திற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த Dr. டேவிட் தாமஸ் அலெக்ஸாண்டர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வருடம் நம் வருடாந்தர எழுச்சி மாநாட்டிற்காக Prof. Dr. மார்ட்டின் தேவபிரசாத் மற்றும் அவர்களது துணைவியார் சாஸ்திரியார் சாராள் மார்ட்டின் அவர்களும் தேவசெய்தி வழங்க இருக்கிறார்கள்.

இந்த மாதத்தின் அனைத்து நிகழ்வுகளுக்காகவும் விஷேசமாக, நம் அறுப்பின் பண்டிகைக்காகவும், வருடாந்தர எழுச்சி மாநாட்டிற்காகவும் (Convention) உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஜெபிக்குமாறு மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW ARRIVAL

"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Ariana Bibin

D/o.Mr.Auswin Bibin & Mrs.Asha K Jose

14-09-2018

Adon Jehuel

S/o.Mr.Anand Chandrasekar & Dr.Aruleena Shaminey

05-10-2018

Joshua Santhosh

S/o.Mr. Ponchristopher & Mrs. Irin Rosy

08-10-2018

பார்வோன் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராகப் பணித்த வேலைப்பளுவின் நிமித்தம் கர்த்தர் பார்வோனைக் கொடிய வாதையினால் வாதித்தார். பார்வோனுக்குத் தொழுநோய் தோன்றி, தலை முதல் கால் வரை அவதிப்பட்டார். ஆனாலும் பார்வோன் இஸ்ரவேல் மக்களை வாதிப்பதை நிறுத்தவில்லை, மாறாக அதிகப்படுத்தினார். தன்னுடைய வாதையினிமித்தம் ஞானிகளையும் மந்திரவாதிகளையும் வரவழைத்து தன்னைச் சுகப்படுத்தும்படி கூறினார். அங்கிருந்த ஞானிகளும், மந்திரவாதிகளும் அவரிடம், “சிறு பச்சிளங்குழந்தைகளின் இரத்தத்தைத் தடவினால் இந்நோய் குணமாகும்” என்றனர்.

பார்வோன் அவர்களுக்குச் செவிமடுத்து, தன்னுடைய வேலையாட்களைக் கோசேன் நாட்டிற்கு அனுப்பி, இஸ்ரவேல் மக்களின் இளம் பிள்ளைகளை எடுத்துக்கொண்டு வருமாறு அனுப்பினான். பார்வோனின் வேலைக்காரர் வந்து தாயின் கரங்களில் தவழும் பச்சிளங்குழந்தைகளை, நாள் ஒன்றிற்கு ஒன்றாக பறித்துச் சென்று பார்வோனிடம் கொடுத்துவிடுவார்கள். மருத்துவர்கள் அவர்களைக் கொன்று அவர்களது இரத்தத்தைப் பார்வோனின் புண்களின்மீது தடவிவந்தனர். இப்படிக் கொல்லப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை முன்னூற்று எழுபத்தைந்து. ஆனாலும் பார்வோனினது கோபம் இஸ்ரவேலர் மீது தணிந்துபோக வில்லை. அது மட்டுமல்லாது அவரது வாதையும் குறைந்தபாடில்லை. சுமார் பத்து ஆண்டுகளாக இந்தக் கொடிய வாதையினால் பாதிக்கப்பட்டிருந்தார். பின்னர் கர்த்தர் அவருக்குப் பொல்லாத கட்டியினாலும், வயிற்றுப் பிரச்சனையினாலும் வாதிக்க, அவருக்குக் கொடிய கொப்பளங்கள் உடலில் தோன்ற ஆரம்பித்தது.

அப்பொழுது, பார்வோனது இரு வேலையாட்கள் கோசேன் நாட்டிலிருந்து வந்து, “இஸ்ரவேல் மக்கள் தங்களது வேலையில் கவனமில்லாமலும் அசதியாயும் இருக்கிறார்கள்” என்றனர். பார்வோனின் கோபம் தன்னுடைய உடல் வேதனையினூடே அதிகரித்தது. அவர் கோபங்கொண்டு, “நான் சுகவீனமாய் இருப்பதனால் என்னைப் பரிகசிக்கிறார்கள். ஆகவே இப்பொழுதே ரதத்தைக் கொண்டு வாருங்கள். நான் அவர்களைச் சென்று பார்க்கவேண்டும்” என்றார். ஆனால் அவர்களோ அவரைக் குதிரையின் மீது ஏற்றிக் கூட்டிச்சென்றனர்.

அவருடன்கூட பத்து குதிரைவீரர்களையும், பத்து காலாட்களையும் அழைத்துக்கொண்டு சென்றனர். குதிரை எகிப்தின் எல்லையைத் தாண்டிச் சென்ற போது ஒரு குருகலான இடத்தை அடைந்தது. அது இரு புறமும் வேலியடைக்கப்பட்டதாயும், சற்று உயரமானதாகவும், அதன் முடிவிலோ சமவெளியின் ஆரம்பமாகவும் இருந்தது. குதிரைகள் அதின்மீது வேகமாக ஏறி ஒன்றோடொன்று மோதிக்கொண்டன. இதனால் பார்வோன் நிலைத் தடுமாறி கீழே விழுந்தார். அவர் மீது குதிரையும் விழுந்தது. உடலில் முழுதும் காயம் கொண்ட பார்வோன் வேதனையின் மிகுதியினால் கதறினார். அவரது மாமிசம் கிழிந்து, எலும்புகள் நொருங்கிப்போயின. இது கர்த்தரால் பார்வோனுக்கு உண்டான தண்டனையாயிருந்தது. ஏனெனில் இஸ்ரவேல் மக்களது கூக்குரல் அவரை எட்டினது.

கீழே விழுந்த பார்வோனை அவரது வீரர்கள் தோளில் சுமந்து கொண்டு எகிப்திற்கே திரும்பி வந்தனர். அவரை அவரது படுக்கையிலே கொண்டு வந்து போட்டனர். பார்வோன் இது தனது முடிவு என உணர்ந்து கொண்டார். தனது மனைவியுடன் சேர்ந்து மிகவும் அழுதார். அவரது அரண்மனையிலுள்ளோர் அனைவரும் அவரைக் கண்டு அவரோடே சேர்ந்து அழுதனர். ராஜபுத்திரரும் ஆலோசனைக்காரரும் பார்வோனை நோக்கி நாட்டை ஆள அவரது குமாரரில் ஒருவரை தெரிவுசெய்யும்படி ஆலோசனை வழங்கினர். அந்த பார்வோனுக்கு மூன்று குமாரர், முறையே ஒத்ரி, அதிகாம் மற்றும் மோரியான் என்போரும் பாத்தியா மற்றும் அகுசி என்னும் இரண்டு குமாரத்திகளும் இருந்தனர். ஒத்ரி முதற்பேரானவர் ஆயினும் ஒரு அறிவில்லாதவனாகவும், அவசரக்காரனாகவும் காணப்பட்டான். ஆனால் அதிகாம் மிகவும் தந்திரமானவனாகவும், எகிப்தைக் குறித்த எல்லாக் காரியங்களிலும் சாதுரியவானும், சற்று பருமனாகவும், ஆனால் குள்ளமானவாகவும் காணப்பட்டான். எனவே அதிகாம் எல்லாக் காரியங்களிலும் புத்திசாலியாகவும், சாதுரியவானுமாகக் காணப்பட்டதால் அவனையே அடுத்த பார்வோனாக்க வேண்டும் என முடிசெய்தார் பார்வோன்.

தொடரும்...

நன்றி:யாசேரின் புத்தகம்.

தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

# மரியின் கிருபை இயேசு

ஆண்டவர் ஆணை காபிரியேல் கொண்டு
மண்புகழ் கலிலேய நாசரேத்தில் தொண்டு
ஆண்டுக் கணக்கே கண்டிராப் பண்டு
விண்இறங்கி மண்கிரங்கி வான்தூது சுமந்து

அறியாள் மரியாள் அருகே குரலொன்று
"கிருபை பெற்றவளே வாழ்க" ! கனிந்து
"கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்"!! நாஉலர்ந்து
கண்ணீர் கன்னி கன்னம் பனித்து........!

"மரியே அரிய கிருபை விருது
பெருமை மகிமை மகனாய்ப் பெற்று
பெரியவராய் பிரகாசிக்க பெயரிடுவாய் இயேசு !
முடிவுறா ராஜ்யத்தில் முடிசூடாது ஆண்டு...."!

"ஒண்ணுமே இல்லே எண்ணுமே உலகத்திலே
தேவனால் கூடாதது ஒண்ணுமே இல்லே !
உன்இனத்தாள் எலிசபெத் மலடிப் பட்டத்திலே
சுமக்கிறாள் கனாமகனை ஆறாம்மாதம் வயிற்றிலே"!

சிறியவள் பெரியவளாய் பெரியவள் சிறியவளாய்
மரியும் எலிசபெத்தும் மாறுகிறார் தாய்களாய்
இருவருக்கும் பெருமை ஒருவருக்கே மேல்பெருமையாய்
பரிசுத்தைக் கென்று உரிய பரிசாய்

கர்ப்ப வதிகள் விருப்பச் சந்திப்பில்
ஒருவரில் ஒருவர் மகிழ்வில் வாழ்த்துதல்
கருத்தைக் கேட்டதில் கருபெருந் துடிப்பில்
நிறைந்தாள் எலிசபெத் பரிசுத்த ஆவியில்

"உரத்த குரலில் உரைத்த வாழ்த்துக்கள்
பெண்களுக் குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவள்
கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப் பட்டதுள்
மரிகரு உருப்பெற விரைவில் இயேசு"!

ஆதாரம் : லூக்கா 1:27–44
கவிதை எண் : 212.
கவி புனைவு : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

எல்லாக் காரியத்துக்கும் காலமும் நியாயமுமுண்டு,
ஆதலால் மனுஷனுக்கு நேரிடும் சஞ்சலம் மிகுதி. பிரசங்கி 8:6

விண்ணும் மண்ணும்
எண்ணும் எழுத்தும்
எல்லாவித எழில்மிகு
படைப்பிற்கும்
முன்பே - நம்
தேவனாகிய பிதா
இருக்கிறார்.
நித்தியமான
சத்தியமான
அறிவின் பூரணமான
அனைத்து
கிரகங்களின்
உரிமையாளரான
கர்த்தரை...
யாராலும்
படைக்கப்படவில்லை
அவராலேதான்
எல்லாமே
படைக்கப்படுகிறது.
உலகில்
உருவாகும் எல்லாக்
காரணங்களின்
காரணமும் அவரே.
இதை உணர்வதே
உன்னதமான
ஆத்மீக அறிவு.
மனிதரின் வாழ்வில்
வந்துபோகும்
இன்பமோ...
துன்பமோ.. இவை
அவரவரின்
கிரியையின்படி
நடப்பது.

முன்னால்
என்னவரும்
பின்னால்
என்னவரும்
என்பதின்
ரகசியம்
கர்த்தரிடமே
உள்ளது.
உடல் தந்தபின்
உயிர்தந்தபின்
உலகில் வந்தபின்
எதுவாயினும் சரி
யாவருக்கும் - ஒரு
காலமுண்டு-ஒரு
நியாயமுண்டு.
உள்ளுக்குள்
ஒன்று வைத்து
உண்மையை
மறைத்து வைத்து
உத்தமன்போல்
நடித்தால்
நல்லவை நடக்குமா?
வல்வினை விட்டுப்
போகுமா..?
வஞ்சகம்
நெஞ்சினில் வந்தால்
சஞ்சலம்தானே
வரும். பின்
அமைதி எங்கே?
நிம்மதி எங்கே?
நல்ல புத்தியும்
இருதய சுத்தியும்
வேண்டுமா....

வாருங்கள் அன்பரே...
வழி காண்போம்.
பணம்... பலம்
அழகு கல்வி
இவை இருந்தால்
இயேசுவை
அணுகமுடியுமா..?
முடியாதுதானே...
உலக மாயையை
விட்டுவிட்டு
மனம் முழுவதும்
இயேசுவை
தொழுதெழும்
ஆர்வமும்
ஆழ்ந்த
புக்தியும் கொண்டு
கர்த்தரே
உன்னுடைய
நித்திய எஜமான்.
நான் உமது
வாழ்நாள்
சேவகன் என்று
தனையே
அர்ப்பணித்து
வேண்டுங்கள்.
இயேசுவின்
அருட்பெருங்
கருணையால்
இம்மையிலும்
இன்பம் வரும்
மறுமையிலும்
பரம் தரும்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

"என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து,
எனக்குச் செவிகொடுத்தருளும்." சங்கீதம் 13:3

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- மூத்தகுடிமக்கள் சிறப்பு வழிபாடு, வாலிபர் சிறப்பு வழிபாடு, Youth fellowship Retreat, J.C. Teachers Retreat, இராஸ் அல் கைமா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக

- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
- திருமணத்திற்காக தெய்வ வழிநடத்துதல் நாடுவோருக்காக, குழந்தை பாக்கியத் திற்காக ஜெபிப்போர், மற்றும் பிரசவ கால கட்டத்தில் இருப்போர் அனைவருக்கும் தேவ ஒத்தாசை, கிருபைக்காக, குடும்பங்களை விட்டுத் தனியே பணிக்காக வந்தவர்களுக்காக
- அனைத்து கல்வி, சமுதாய, மருத்துவ ஊழியங்களுக்காய் ஜெபிப்போம்
- நம் வாழ்வின் அனைத்து சூழ்நிலைகளிலும் தேவ ஆளுகை, வல்லமைக்காக, வழிநடத்துதல்களுக்காக,
- பொருளாதார நெருக்கடியினால் வேலையில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகள் நீங்கவும், பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருடைய தேவைகள் சந்திக்கப்படவும்,
- குடும்பங்களில், வேலையிடங்களில் மன அழுத்தத்தோடு வாழும் மக்கள் நல்வாழ்வு பெற ஜெபிப்போம்.
- உயர் கல்விக்காக ஆயத்தப்படும் பிள்ளைகள் ஏற்ற கல்வி பெற்று வாழ்வு உயர்த்தப்படவும் ஜெபிப்போம்.
- உலகின், இந்தியாவின், தமிழ்நாட்டின் அரசியல் நிலை சீரடைய ஜெபிப்போம்.
- நடைபெறவுள்ள துபாய், ஃபுஜைரா திருச்சபைகளின் ஸ்தோத்திரப்பண்டிகையின் ஆயத்தப்பணிகளுக்காக, வருடாந்திர நற்செய்திக் கூட்ட ஒழுங்குகளுக்காக ஜெபிப்போம்.

"கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர்; அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்." சங்கீதம் 10:17

நமக்கென ஓர் ஆலயம் கட்டுவதற்கான இடவசதியும், பொருளாதார தேவைகளும் சந்திக்கப்பட சபையார் தங்கள் தனி ஜெபங்களிலும், குடும்ப ஜெபங்களிலும் ஊக்கமாக தொடர்ந்து ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

# வெள்ளைப்போளம், தூபவர்க்க மரம்

